# கம்பனில் வாழ்வியல் நெறிகள்



இளம்பிறை மணிமாறன்

இராஜபாளையம் கம்பன் கழக வெளியீடு

# கம்பனில் வாழ்வியல் நெறிகள்

நாவுக்கரசி

பேராசிரியை இளம்பிறை மணிமாறன்

**கம்பன் கழகம்**

13, தாண்டல் கந்தசாமி ராஜா தெரு,

இராஜபாளையம் - 626 117.

தொலைபேசி: (04563) 231588

# கம்பனில் வாழ்வியல் நெறிகள்

## பொருளடக்கம்


| வரிசை எண் | தலைப்பு | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | தோற்றுவாய் | 1 |
| 2. | சமயமும் மக்களும் | 11 |
| 3. | ஆட்சி புரிவோருக்கு அறநெறி | 15 |
| 4. | அமைச்சனின் கடமை | 24 |
| 5. | உத்தம புத்திரன் | 31 |
| 6. | சூழலும் சுகமும் | 40 |
| 7. | பதவி என்னும் பொன்விலங்கு | 45 |
| 8. | ஆவதும் அவனாலே | 54 |
| 9. | அறம் என்னும் அரண் | 62 |
| 10. | அன்பிற் சிறந்த தவமில்லை | 73 |
| 11. | கற்பென்னும் திண்மை | 82 |
| 12. | சொல்லெல்லாம் சொல்லாகுமா? | 94 |
| 13. | நன்றிக்கு வித்தான நல்லொழுக்கம் | 104 |
| 14. | மன்னிப்பு என்னும் இறைப்பண்பு | 119 |
| 15. | பூரண சகோதரத்துவம் | 128 |
| 16. | உயிர் பறிக்கும் காமம் | 148 |
| 17. | விதியின் பிழை | 159 |
| 18. | நஞ்சு உண்பார் கள் உண்பவர் | 166 |
| 19. | கம்பன் உரைக்கும் பல்வகை அறங்கள் | 174 |



பேராசிரியை இளம்பிறை மணிமாறன்

பேராசிரியை அவர்கள், பாரதிகண்ட புதுமைப் பெண்ணாய்த் திகழ்பவர். தேனினும் இனிய தீந்தமிழில், தமது சொல்வன்மையை இலக்கிய - ஆன்மீகக் கருத்துரைகளின் மூலம் வெளிப்படுத்தி, தமிழ் நாட்டு மக்களின் உள்ளங்களில், தமக்கெனத் தனி இடம் பெற்றவர். முத்தமிழ் முழங்கும் இவரது ஒவ்வொரு நிகழ்ச்சியும், கேட்போரை நெகிழ்ச்சியுறச் செய்வன. சொன்னதையே சொல்லாமல், நவில்தொறும் நூல்நயம்போல, புத்தம் புதுக் கருத்துக்களைச் சொல்லி சொற்பொழிவில் புதுமை படைப்பவர் இவர். இவ்வாறு துறைதோறும் தமிழ்த்தொண்டு செய்துவரும் பேராசிரியை இளம்பிறை மணிமாறன் அவர்கள், தூத்துக்குடி ஏ.பி.சி. மகாலட்சுமி கல்லூரியின் முதல்வராகவும், ஆங்கிலத் துறைத் தலைவராகவும் திறம்படச் செயல்பட்டு வருபவர்.

தாய்மொழியாம் தமிழில் தலைசிறந்த இலக்கியவாதியாகவும், பேராசிரியையாகவும் திகழும் திருமதி. இளம்பிறை மணிமாறன் அவர்கள், ஆங்கிலம், தமிழ், வடமொழி, மலையாளம் முதலிய மொழிகளில் ஆழ்ந்த புலமையுடையவர். இதிகாச, புராண நூல்களில் 'நுண்மாண் நுழைபுலம்' மிக்கவர். மாமன்றங்களைத் தனது மந்திரச்சொற்களால் கட்டுண்டு கிடக்கச் செய்யும் மாண்புடையார். தமிழகத்தில், பேராசிரியை அவர்களை அழைத்துச் சென்ற, பெருமையும், பெருமிதமும் கொண்ட மேடைகள் ஏராளம்! ஏராளம்!! தமது திறமான புலமையால், தித்திக்கும் தமிழால் இங்கிலாந்து, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுவாழ் தமிழ் உள்ளங்களையும் வென்று வந்துள்ளார் இவர்.

உரையாலும் எழுத்தாலும் உலகை நல்வழிப்படுத்துவது ஒன்றையே தம் வாழ்வுக் குறிக்கோளாகக் கொண்டுள்ள பேராசிரியை அவர்களுக்கு, நாவுக்கரசி, செஞ்சொல் வாரிதி, சிலம்புச் செல்வி, கம்பன் கவித்திலகம் போன்ற பட்டங்களை, மக்கள் மன்றங்கள் மனமுவந்து அளித்து மகிழ்ச்சி கொண்டுள்ளன.

கம்பனும் கீதையும், சவுந்தரியலகரி, அம்பிகை அழகு தரிசனம், திருக்குறட்பாவை போன்ற பைந்தமிழ் நூல்களைப் படைத்துத் தம்புகழ் நிறுவியுள்ள பேராசிரியை அவர்கள், இப்போது 'கம்பனில் வாழ்வியல் நெறிகள்' எனும் இந்நூலைப் படைத்திருக்கிறார்கள்.

அடுத்து, தஞ்சை சரபோஜி மன்னர் நூலகத்தில் இடம்பெற்றுள்ள வரலாற்றுச் சான்றுகள் மற்றும் பழம்பெரும் ஓலைச்சுவடிகளை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் தமிழுக்கு ஒரு 'புத்திலக்கியத்தை' தர விரும்புகிறார் என்ற புதுச் செய்தியை தெரிவித்துக் கொள்வதோடு கூட, எல்லாம் வல்ல கம்பராமன், நமது பேராசிரியை அவர்களுக்கு, எல்லா நலனும் வளனும் அளித்தருள வேண்டி, வாழ்த்துகிறோம்.

---

**இராஜபாளையம் கம்பன் கழகத்தார்**